DINATHANTHI 09 DEC 2007



ஈஷா யோகா மையம் சார்பில்

# மரக்கன்றுகள் நடும் விழா

ஈரோடு, டிச.9–

ஈஷா யோகா மையம் சார்பில் $2\frac{1}{2}$ கோடி மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. ஈரோட்டில் மட்டும் 10 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. இது பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் நிகழ்ச்சியாக மரக்கன்றுகள் நடும் விழா ஈரோடு கொங்கு கலையரங்கில் நேற்று மாலை நடைபெற்றது.

ஈரோடு நகரசபைத்தலைவர் குமார் முருகேஷ் தலைமை தாங்கினார். ஆர்.எம்.பழனிச்சாமி எம்.எல்.ஏ சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி விழாவை தொடங்கிவைத்தார். அருணகிரி வரவேற்றார். கொங்கு என்ஜினீயரிங் கல்லூரியின் முன்னாள் தாளாளர் குமாரசாமி உள்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர். நந்தா, மகாராஜா, இபா, கொங்கு, வாசவி ஆகிய கல்லூரிகளை சேர்ந்த சுமார் 50 மாணவ–மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. அவர்கள் மரத்தின் அவசியம், அதன் பயன்கள் குறித்து நடித்துக்காட்டினார்கள். நிகழ்ச்சிக்கு வந்த பொதுமக்களுக்கு மா, பலா, கொய்யா, தேக்கு உள்ளிட்ட ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. பசுமைக்கரங்கள் தொடர்பான புகைப்பட கண்காட்சியும் இடம்பெற்றது.